


ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த மாணவன் சூர்யாவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் அவரது சொந்த நிதியில் இருந்து கல்வி உதவித்தொகை வழங்கினார்.



நீலகிரி மண்டலத்தில் ஊட்டி சரக கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளராக ப.அஜித் குமார் பொறுப்பேற்றுக் கொண்டார்.

# சித்தோடு ஆவின் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் கலெக்டர் ச.கந்தசாமி நேரில் ஆய்வு



**ஈரோடு,ஆக.31-**

ஈரோடு மாவட்டம், சித்தோடு (ஆவின்) கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தினை கலெக்டர் ச.கந்தசாமி நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, கலெக்டர் பால் பண்ணையில் செயல்பட்டு வரும் பல்வேறு பிரிவுகளை ஆய்வு செய்து ஈரோடு மாவட்டத்தில் பால் உற்பத்தியை அதிகரிக்கவும் மற்றும் பால் உற்பத்தியாளர்களின் நலனை மேம்படுத்தவும் அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கினார். மேலும், பால் பதப்படுத்துதல், வெண்ணைய், நெய், பால் பவுடர், பால் கோவா உற்பத்தி ஆகிய பிரிவுகளின் உற்பத்தி ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு அவற்றின் மேம்பாட்டிற்கு ஆலோசனை வழங்கினார்.

தொடர்ந்து, கலெக்டர், ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய அலுவலகத்தில் ஒன்றிய அலுவர்களுடன் ஆய்வு கூட்டம் நடத்தினார்.

இக்கூட்டத்தில், ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட பால் கொள்முதல் குறியீட்டு அளவான நாள் ஒன்றுக்கு 1,85,000 லிட்டர் அளவை எய்திடவும், புதிய பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களை அமைத்து பால் கொள்முதலை அதிகரிக்கவும், நலிவடைந்த பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களை மகளிர் சுயஉதவி குழுக்களின் மூலம் புதிதாக்கம் செய்யவும் அறிவுறுத்தினார். மேலும் பால் உற்பத்தியாளர்களுக்கு தேவையான கறவை கடன், பராமரிப்பு கடன் மற்றும் கறவை மாடுகளை காப்பீடு செய்யும் வசதி அனைத்து பால் உற்பத்தியாளர்களுக்கு சென்றடைய தேவையான நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

மேலும் பால் விற்பனையை அதிகரிக்க மக்கள் கூடும் இடங்களில் ஆவின் பாலகங்கள் அமைத்திட அறிவுறுத்தினார். இந்த ஆய்வின் போது, துறை சார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.

உதகை நகராட்சியில்

# நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு முகாமில் பொதுமக்களுக்கு அளிக்கப்படும் பரிசோதனைகள்

## கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் பார்வையிட்டார்



**ஊட்டி,ஆக.31-**

நீலகிரி மாவட்டம் உதகை நகராட்சி பெத்லகேம் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில், பொதுசுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்புமருந்துத்துறை சார்பில் நடைபெற்ற 'நலம் காக்கும் ஸ்டாலின்' சிறப்பு முகாமில், கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு பொதுமக்களுக்கு அளிக்கப்படும் பரிசோதனைகளை நேரில் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் கலெக்டர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் (02.08.2025) அன்று 'நலம் காக்கும் ஸ்டாலின்' சிறப்பு மருத்துவ முகாமினை தொடங்கி வைத்தார்கள். அதனை தொடர்ந்து நீலகிரி மாவட்டத்தில், கோத்திகிரி புனித அந்தோணியார் மேல்நிலைப்பள்ளியில் 'நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்புமுகாம்'(முதல் முகாம்) நடைப்பெற்றது. தமிழகம் முழுவதும் 1256 முகாம்கள் நடத்தப்பட உள்ளது.

இன்றைய தினம் 3வது முகாமானது உதகை நகராட்சி பெத்தலகேம் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெறுகிறது. இம்முகாமில் பல்வேறுவகை சிறப்பு மருத்துவ சேவைகளான, புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகள், முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீடு அட்டை வழங்குதல், அமைப்புச்சாரா தொழிலாளர்களுக்கான அடையாள அட்டை வழங்குதல், இரத்தப்பரிசோதனை, இசிஜி, எக்கோ, எக்ஸ்ரே, அல்ட்ராசோனோகிராம் ஸ்கேன், சளிபரிசோதனை, சிறுநீர் பரிசோதனை மற்றும் மார்பகப் புற்றுநோய் உள்ளிட்ட அனைத்து பரிசோதனை முடிவுகளை உள்ளடக்கிய மருத்துவக் கோப்புகளும் (குழடனநச) வழங்கப்படும். இம்மருத்துவ முகாமில், பொதுமருத்துவம், பொது அறுவை சிகிச்சை, எலும்பு முறிவு, மகப்பேறு மருத்துவம், காது, மூக்கு, தொண்டை, மனநலம், இயன்முறை மருத்துவம், ரேடியாலஜி, நுரையீரல் நோய் சிகிச்சை, நீரிழிவுநோய் சிகிச்சை, சித்தா மற்றும் ஆயுர்வேதம் ஆகிய சிகிச்சைகள் அளிக்கப்படுகிறது.

மேலும் இ.சி.ஜி. இரத்தப் பரிசோதனைகள் செய்யப்பட்டு உடனுக்குடன் குறிப்புகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் மேல் சிகிச்சை தேவைப்படும் நோயாளிகளுக்கு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்து சிறப்பு சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

மேலும் இந்தமுகாம் மூலம் கர்ப்பிணி தாய்மார்கள், முதியோர்கள்;, குழந்தைகள் தொற்றாநோய் (40 வயதிற்கு மேல உள்ளவர்கள்), மாற் றுத் தி ற னா ளி கள், தூய்மை பணியாளர்கள், அமைப்புச்சாரா பணியாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் என அவைரும் பயன் பெறுவார்கள். இம்முகாம் காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணி வரை நடைபெறும். இம்மருத்துவ முகாமில் பல்வேறு சிறப்பு மருத்துவ நிபுணர்கள் வருகை தந்து சிறப்பு மருத்துவச் சேவைகள் அளிக்க உள்ளனர். எனவே பொதுமக்கள் அனைவரும் இம்முகாமில் தவறாது கலந்து கொண்டு பயன்பெறுமாறு கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.

மேலும் சிகிச்சை பெற்று வருபவர்களிடம், இந்த மருத்துவ முகாமில் எந்த எந்த சிகிச்சை அளித்தனர் என கலெக்டர் கலந்துரையாடினார்கள். இந்நிகழ்வில் இணை இயக்குநர் (மருத்துவ நலப்பணிகள்) மரு.ராஜசேகரன், துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு.சோமசுந்தரம், உதகை நகர்மன்ற தலைவர் வாணீஸ்வரி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் குப்புராஜ், உதகை வட்டாட்சியர் சங்கர் கணேஷ், உதகை வட்டார மருத்துவ அலுவலர் மரு.முருகேசன், உதகை நகர்நல அலவலர் மரு.சிபி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பவானிசாகர் அணையில் இருந்து தடப்பள்ளி - அரக்கன் கோட்டை பாசனத்திற்கு 950 கன அடி நீர் திறப்பு

**ஈரோடு, ஆக.31 -**

ஈரோடு , கரூர், திருப்பூர் மாவட்ட மக்களின் குடிநீர் ஆதாரமாகவும், 2.47 லட்சம் விளை நிலங்களின் வாழ்வாதாரமாகவும் உள்ளது பவானிசாகர் அணை. 105 அடி கொள்ளளவு கொண்ட பவானிசாகர் அணையின் முக்கிய நீர் பிடிப்பு பகுதியான நீலகிரி மலைப்பகுதி இருந்து வருகிறது.

நீர்ப்பிடிப்பு பகுதியில் பரவலாக மழை பெய்து வருவதால் கடந்த சில நாட்களாகவே பவானிசாகர் அணை நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. இதன் காரணமாக கடந்த மாதம் 27ஆம் தேதி 100 அடியை தாண்டியது. இதனால் அணைக்கு வந்த உபரி நீர் அப்படியே பவானி ஆற்றுக்கு வெளியேற்றப்பட்டதால் பவானி ஆற்றங்கரை மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டது. அதன் பிறகு நீர்வரத்து சீரானது.

இந்நிலையில் மீண்டும் நீர்பிடிப்பு பகுதியில் பரவலாக மழை பெய்து வருவதால் பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதன் காரணமாக கடந்த 19ஆம் தேதி பவானிசாகர் அணை 102 அடியை எட்டியது. இதனை எடுத்து பவானிசாகர் அணைக்கு வரும் உபரிநீர் அப்படியே பவானி ஆற்றுக்கு திறந்து விடப்பட்டு உள்ளது. இதனால் பவானி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. தற்போது பவானிசாகர் அணை பகுதியில் மழை பொழிவு இல்லாததால் அணைக்கு வரும் நீர்வரத்து குறைந்துள்ளது.

இதனால் அணை நீர்மட்டம் குறைந்து வருகிறது. நேற்று காலை பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 101. 81 அடியாக குறைந்தது. அணைக்கு 3, 486 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. கீழ்பவானி வாய்க்காலுக்கு 2,300 கன அடியும், தடப்பள்ளி- அரக்கன் கோட்டை பாசனத்திற்கு 950 கன அடியும், காலிங்கராயன் பாசனத்திற்கு 100 கன அடியும், பவானி ஆற்றுக்கு 100 கன அடியும் என மொத்தம் அணையில் இருந்து 3, 450 கன அடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. இதேபோல் மாவட்டத்திலுள்ள மற்ற அணையின் நீர்மட்டமும் தொடர்ந்து குறைந்து வருகிறது. அதன்படி குண்டேரி பள்ளம் அணையின் நீர்மட்டம் 20.01 அடியாக உள்ளது.இதேபோல் வரட்டு பள்ளம் அணையின் நீர்மட்டம் 21.98 ஆகவும், பெரும்பள்ளம் அணையின் நீர்மட்டம் 12.99 அடியாகவும் உள்ளது

# நீலகிரி பாய்ஸ் கம்பெனி அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தில் கொடியேற்றம்



**ஊட்டி, ஆக.31-**

புனித ஆரோக்கிய மாதா பிறந்த நாளை ஒட்டி நீலகிரியின் வேளாங்கண்ணி என புகழப்படும் பாய்ஸ் கம்பெனி அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தில் கொடியேற்றம் நிகழ்ச்சி நடைபெற்றது.

நாகை மாவட்டம் வேளாங்கண்ணியில் பிரசித்தி பெற்ற புனித ஆரோக்கிய மாதா பேராலயம் உள்ளது. புனித ஆரோக்கிய மாதாவின் பிறந்தநாள் விழாவையொட்டி பேராலய ஆண்டு திருவிழாஆண்டுதோறும் 10 நாட்கள் நடப்பது வழக்கம். தேவாலயத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 29-ந் தேதி

கொடியேற்றத்துடன் திருவிழா தொடங்கும். இந்த திருவிழாவில் கலந்து கொள்ள தமிழக மட்டுமல்லாமல் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்தும் பக்தர்கள் செல்வார்கள். இதனால் விழா நாட்களில் பேராலயத்தில் தமிழ், ஆங்கிலம், இந்தி, மலையாளம், கன்னடம், கொங்கனி, தெலுங்கு உள்பட பல்வேறு மொழிகளில் சிறப்பு திருப்பலி நிறைவேற்றப்படுகிறது.

இந்தநிலையில் அதேதினத்தில் நீலகிரி மாவட்டம், பாய்ஸ் கம்பெனி ஆரோக்கிய அன்னை வேளாங்கண்ணி மாதா திருத்தலத்தில் இந்த ஆண்டு திருவிழா நேற்று முதல் தொடங்கியது. முதல் நிகழ்ச்சியாக, அன்னை திருஉருவகொடி கேட்டில் பவுண்டில் பகுதியில் இருந்து ஊர்வலமாக கொண்டு வரப்பட்டது.

அப்போது ஊட்டி மறை மாவட்ட முதன்மை குரு கிறிஸ்டோபர் லாரன்ஸ் மற்றும் பங்கு குருக்கள் புனிதம் செய்து கொடியேற்றினர். இதைத்தொடர்ந்து ஆடம்பர திருப்பலி நடைபெற்றது. நீலகிரியில் உள்ள பல்வேறு தேவாலயங்களை சேர்ந்த குருக்கள் கலந்து கொண்டு திருப்பலியை நிறைவேற்றினர். அடுத்த 9 நாட்களுக்கு தினமும் நவநாள் திருப்பலி ஜெபங்கள் நடத்தப்பட உள்ளன. இதன் முக்கிய நிகழ்வாக செப்டம்பர் மாதம் 8-ந் தேதி தேர்த்திருவிழா நடைபெற உள்ளது.

நீலகிரியின் வேளாங்கண்ணி என அழைக்கப்படும் இங்கு நீலகிரி மாவட்டம் மட்டுமின்றி தமிழகம், கேரளம் உட்பட பிற மாநிலங்களில் இருந்தும் ஏராளமான பங்கு மக்கள் கலந்து கொண்டனர்.ஏற்பாடுகளை தேவாலய பங்கு தந்தை ஆரோக்கியராஜ், மற்றும் அருட்பணியாளர்கள், பங்கு மக்கள் செய்து வருகின்றனர்.

# பெருந்துறை தி கொங்கு வேளாளர் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னலாஜி டிரஸ்ட்டின் புதிய நிர்வாகிகள் பொறுப்பேற்பு



**ஈரோடு ஆக 31-**

பெருந்துறையில்உள்ளதி கொங்குவேளாளர்இன்ஸ்டிடியூட்ஆப்டெக்னலாஜிடிரஸ்ட் கொங்குபொறியியற்கல்லூரி, கொங்குபாலிடெக்னிக்கல்லூரி, கொங்குகலைஅறிவியல் கல்லூரி, கொங்கு தனியார் தொழில் பயிற்சிநிலையம், கொங்குநேஷனல் மெட் ரிக் கு லே சன் மேல் நிலைப்பள்ளி, கொங்குஸ்கூல் ஆப்ஆர்க்கிடெக்ஸர்கல்லூரி மற்றும்கொங்குநேச்சுரோபதி மற்றும்யோகாமெடிக்கல்கல்லூரிஆகியநிறுவனங்களைநடத்திவருகின்றது.

இந்நிறுவனங்களின்மூலம் தன்னுடைய 42 வருட கல்வி சேவையை இந்த அறக்கட்டளைநாட்டிற்குஅர்ப்பணித்துக் கொண்டுள்ளது. இந்த டிரஸ்ட்டின்வரும் (2025-2028) மூன்றாண்டு காலத்திற்கான நிர்வாகிகளை தேர்ந்தெடுக்கதேர்தல் 29.08.2025, வெள்ளிக்கிழமை அன்றுநடைபெற்றது. கீழ்க்காணும்புதியநிர்வாகிகள்ஏகமனதாகதேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

பி.சி.பழனிசாமிபி.எஸ்சி., பி.எல்., தலைவராகவும், ஆர். ஆர்.சத்தியமூர்த்திபி. ஆர்க்., எம்.எஸ்., செயலாளராகவும், ஈ.ஆர்.கார்த்திகேயன், எம்.ஏ., பொருளாளராகவும், ஈ.ஆர். கே.கிருஷ்ணன் எம்.காம்., கொங்கு பொறியியற் கல்லூரி மற்றும் கொங்கு ஸ்கூல் ஆப் ஆர்க்கிடெக்ஸர் கல்லூரியின் தாளாளராகவும், கே.கார்த்திகேயன், பி.எஸ்சி., எம்.ஓ.எம் ., கொங்குபாலிடெக்னிக்கல்லூரி, கொங்கு தனியார் தொழில் பயிற்சிநிலையம் மற்றும் கொங்கு நேச்சுரோபதி மற்றும் யோகா மெடிக்கல்கல்லூரி தாளாளராகவும், பி.சச்சிதானந்தன் கொங்குகலை அறிவியல் கல்லூரி தாளாளராகவும், டாக்டர்.கே.செங்கோட்டுவேலன், எம்.பி.பி.எஸ்., டி.சி.ஹெச்., கொங்கு நேஷனல் மெட்ரிக் குலேசன் மேல்நிலைப் பள்ளியின் தாளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். டாக்டர். எம்.மா ணிக் கம் எம்.எஸ்சி., எம்.பி.ஏ., .ஏ.வெங்கடாசலம்பி. எஸ்சி., மாலதிஇளங்கோபி.ஏ., ஏ.கே.இளங்கோ, பி.காம்.,எம்.பி.ஏ., எல்.எல்.பி., மற்றும் டாக்டர்.ஆர்.குமாரசுவாமி எம்.பி.பி.எஸ்., ஆகியோர்உபதலைவர்களாகவும், பி.டி.தங்கவேல்பி.பி.எம்., மற்றும் ஆர்.பாலகிருஷ்ணன்டி. எம்.இ., ஆகியோர் இணைச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய நிர்வாகிகள் பதவி ஏற்று கொண்டார்கள். இந்ததகவலை அறக்கட்டளையின் தேர்தல் அதிகாரி டாக்டர்.ஆர்.குமாரசுவாமி, எம்.பி.பி.எஸ்., தெரிவித்தார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டபுதியநிர்வாகிகளுக்குஅறக்கட்டளையின்உறுப்பினர்கள், நிறுவனங்களின் முதல்வர்கள், ஆசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் மாணவ மாணவியர்கள்உள்ளிட்டஅனைவரும் வாழ்த்துதெரிவித்தனர்.

# ஊட்டியில் விநாயகர் விசர்ஜன ஊர்வலம்



**ஊட்டி, ஆக.31-**

ஊட்டியில் இருந்து ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்ட 50 விநாயகர் சிலைகள் காமராஜர் அணையில் கரைக்கப்பட்டன.

நீலகிரி மாவட்டத்தில் விநாயகர் சதுர்த்தி விழா கடந்த 27-ந் தேதி கொண்டாடப்பட்டது. இதையொட்டி ஊட்டி இரட்டைப் பிள்ளையார் கோவில் உள்பட பல்வேறு இடங்களில் நடந்த சிறப்பு பூஜைகளில் பொது மக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

மேலும் விநாயகர் சதுர்த்தியை ஒட்டி பொது இடங்களில் இந்து முன்னணி, சிவசேனா, விஸ்வ இந்து பரிஷத், இந்து மக்கள் கட்சி உள்பட பல்வேறு அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் சார்பில் நீலகிரி மாவட்டத்தில் 428 விநாயகர் சிலைகள் வைத்து பிரதிஷ்டை செய்யப்பட்டன.அங்கு பக்தர்கள் வழிபாடு நடத்தி, தரிசனம் செய்தனர். பொது இடங்களில் வைக்கப்பட்ட சிலைகளுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டது.

இந்தநிலையில் ஊட்டியில் பிரதிஷ்டை செய்த விநாயகர் சிலைகள் விசர்ஜன ஊர்வலம் நேற்று நடைபெற்றது. ஊட்டி பழங்குடியினர் பண்பாட்டு மையப் பகுதியில் இருந்து இருந்து ஊர்வலம் தொடங்கியது.இதில், விசுவ இந்து பரிசத், சிவசேனா, அனுமன் சேனா உட்பட பல்வேறு அமைப்புகளை சேர்ந்த 50 சிலைகள் ஜீப், லாரிகளில் வைத்து ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டது. மேளதாளம் முழங்க வாகனங்களில் விநாயகர் சிலைகள் சேரிங்கிராஸ், கமர்சியல் சாலை, காபிஹவுஸ் ரவுண்டானா, மார்க்கெட், மெயின் பஜார், மின்வாரிய ரவுண்டானா வரை ஊர்வலம் நடந்தது. போலீஸ் சூப்பிரண்டு நிஷா தலைமையில் 300 போலீசார் பாதுகாப்புடன் ஊட்டி அருகே காமராஜர் அணைக்கு கொண்டு செல்லப்பட்டு சிலைகள் கரைக்கப்பட்டன.

இதேபோல கோத்தகிரியில் விநாயகர் விசர்ஜன ஊர்வலத்தில் 20 விநாயகர் சிலைகள் கொண்டு செல்லப்பட்டன. கோத்தகிரியில் இருந்த விநாயகர் சிலைகள் உயிலட்டி நீர்வீழ்ச்சியில் கொண்டு சென்று கரைக்கப்பட்டன. முன்னதாக விநாயகர் சிலை ஊர்வலத்தை கேமராவில் பதிவு செய்தும் பல்வேறு இடங்களில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கேமராக்கள் மூலமாக போலீசார் தீவிரமாக கண்காணித்தனர். விநாயகர் விசர்ஜன ஊர்வலத்தை ஒட்டி போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டு இருந்தது.இதைத் தொடர்ந்து இந்து முன்னணி அமைப்புகள் சார்பில் நீலகிரியில் ஊட்டி, குன்னூர், கோத்தகிரி, கூடலூர், பந்தலூர் பகுதிகளில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) விநாயகர் சிலைகள் விசர்ஜன ஊர்வலம் நடைபெற உள்ளது. இந்த ஊர்வலங்களில் 350-க்கும் மேற்பட்ட சிலைகள் கொண்டு செல்லப்பட உள்ளன.

# அந்தியூர் நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாமில் காசநோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்கள்: ஏ.ஜி. வெங்கடாசலம் எம்.எல்.ஏ. வழங்கினார்



**ஈரோடு ஆக 31**


ஈரோடு மாவட்டம் அந்தியூர் வட்டாரம் அந்தியூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாமில் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் கலந்துகொண்டு காசநோய் மற்றும் புகையிலை விழிப்புணர்வு கண்காட்சி அரங்கு மற்றும் காசநோய் கண்டறியும் நடமாடும் நெஞ்சக ஊடுகதிர் வாகனத்தை பார்வையிட்டு, காசநோயினால் பாதிக்கப்பட்ட 10 நபர்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கினார்.

ஈரோடு மாவட்ட துணை இயக்குனர் காசநோய் மருத்துவப் பணிகள் மரு.ராமச்சந்திரன் அவர்கள் ஈரோடு மாவட்டத்தில் தேசிய காசநோய் ஒழிப்பு திட்டத்தின் சார்பில் நடைபெறும் பணிகள் மற்றும் மக்களுக்கு கிடைக்கும் பயன்கள் குறித்து அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் அந்தியூர் பேரூராட்சி தலைவரிடம் விரிவாக எடுத்துரைத்தார்.

இந்த மருத்துவ முகாமில் காசநோய் மற்றும் புகையிலை தடுப்பு விழிப்புணர்வு கண்காட்சி அரங்கை பார்வையிட்ட பொதுமக்களுக்கு ஈரோடு மாவட்ட துணை இயக்குனர் காசநோய் மருத்துவப் பணிகள் அலுவலக மாவட்ட நலக்கல்வியாளர் சிவகுமார் மற்றும் மாவட்ட சுகாதார அலுவலக மாவட்ட புகையிலை தடுப்பு பிரிவு சமூக சேவகர் சங்கீதா ஆகியோர் காசநோய் ஒழிப்பு மற்றும் புகையிலை தடுப்பு குறித்து விழிப்புணர்வு நலக்கல்வி அளித்தனர்.

முகாமில் மாவட்ட சுகாதார அலுவலர், மாவட்ட காசநோய் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மகேந்திரன், சுதன் சர்மா, வட்டார மருத்துவ அலுவலர் மரு. சக்தி கிருஷ்ணன், காசநோய் முதுநிலை சிகிச்சை மேற்பார்வையாளர்கள் சண்முகம், விஜயசேகர், காசநோய் சிகிச்சை பார்வையாளர்கள் சண்முகவடிவு, தேவி அபிராமி, நடமாடும் எக்ஸ்ரே ஊர்தி குழுவினர்கள், உயர் அரசு அலுவலர்கள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்

# ஒசூர் அருகே விநாயகர் ஊர்வலத்தில் சமூக நல்லிணக்கத்தை வெளிப்படுத்த பொதுமக்களுக்கு உணவு வழங்கிய இஸ்லாமியர்கள்



கிருஷ்ணகிரி,ஆக.31-

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் அடுத்த பேரிகையில் ஆண்டுதோறும் விநாயகர் சிலை ஊர்வலம் வெகு விமர்சையாக கொண்டாட்டங்களுக்கு இடையே நடைபெறுவது வழக்கம்.

இஸ்லாமிய பள்ளி வாசல்கள் உள்ள சாலையில் இந்த ஊர்வலம் நடைபெறுவதால் கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு விரும்பதகாத செயலின் காரணமாக இரு மதத்தினரிடையே ஏற்பட்ட தகராறு கலவரமாக மாற இருந்தநிலையில், நல்வாய்ப்பாக தவிர்க்கப்பட்டது.

அதன்பின்பு கடந்த 5 ஆண்டுகளாக எவ்வித சிறு சச்சரவின்றி விநாயகர் ஊர்வலங்கள் முன்பை விட வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டு வருகிறது.. இதற்கு முக்கிய காரணமாக பேரிகை சூளகிரி ஒன்றிய செயலாளர் நாகேஷ் இருந்து வருகிறார்..

அவர் தலைமையில் நடைபெறும் ஊர்வலத்தில் இஸ்லாமியர்கள் தாங்களாகவே மத நல்லிணக்கத்தை காக்க ஊர்வலத்தில் பங்கு பெறும் மக்களுக்கு அறுசுவை அன்னதானங்களை வழங்கி ஊர்வலத்தில் அவர்களும் பங்கெடுத்து வருகின்றனர்.. கேரளா செண்டமேளம், பம்பை, திண்டுக்கல் தப்பாட்டம், வேலூர் டிரம்ஸ், கேரளா இசைக்குழுவிகள், கண்ணை கவரும் வண்ணங்களில் மோகினி நடன கலைஞர்கள் என பேரிகை கிராமமே திருவிழா கோலம் பூண்டது.. நூற்றுக்கணக்கான இசைக்கலைஞர்கள் சாலைநெடுகிலும் இருக்க, 5 குதிரைகள் மீது அமர்ந்திருக்கு பிரம்மாண்ட பால விநாயகர் ஊர்வலம் பேரிகையின் அனைத்து தெருக்களிலும் சென்று வந்தது..

மதங்களை கடந்து இந்து இஸ்லாமியர்கள் பங்கேற்ற சமத்துவ ஊர்வலமாக இருந்ததினாலும், நூற்றுக்கணக்கில் இளைஞர்கள் குத்தாட்டம் போட்டது பொதுமக்களுக்கு கண்கொள்ளா காட்சியாக இருந்தது...

பண்டிகைகள் அனைவருக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்த வேண்டுமென தவிர ஒரு தரப்பிற்கு கொண்டாட்டமாகவும், மற்ற தரப்பினருக்கு இடையூறாக இருக்கக்கூடாது என்கிற நோக்கில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவே இதுபோன்ற முயற்சியை மேற்கொள்வதாக திமுக ஒன்றிய செயலாளர் நாகேஷ் தெரிவித்தார்...பின்னர் ஊர்வலத்தில் பங்கேற்ற இஸ்லாமியர்களை கவுரவித்து நன்றி கூறினர்.

# தமிழ்நாடு முதலமைச்சர் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வருகை புரிவதையொட்டி முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம்

## அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் நடைபெற்றது



கிருஷ்ணகிரி,ஆக.31-

கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், தமிழ்நாடு முதலமைச்சர் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு செப்டம்பர் - 2025, இரண்டாவது வாரத்தில் வருகைபுரிவதையொட்டி, முன்னேற்பாடு பணிகள் மற்றும் அரசின் முன்னோடி திட்டங்கள் மற்றும் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில், கலெக்டர் ச.தினேஷ் குமார் சட்டமன்ற உறுப்பினர்கள் தே.மதியழகன் (பர்கூர்), ஒய். பிரகாஷ் (ஓசூர்), டி.ராமச்சந்திரன் (தளி) ஆகியோர் முன்னிலையில் (30.08.2025) நடைபெற்றது. உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் , கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு செப்டம்பர் - 2025 இரண்டாவது வாரத்தில் வருகை புரிந்து, கிருஷ்ணகிரியில் நடைபெறும் அரசு விழாவில் கலந்து கொண்டு, புதிய திட்டப்பணிகளை துவக்கி வைத்து, முடிவுற்ற திட்ட பணிகளை திறந்து வைத்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க உள்ளார்கள். மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில், ஒசூரில் நடைபெறும் முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்துகொள்ள உள்ளார்கள்.

அதனடிப்படையில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, நெடுஞ்சாலைத்துறை, பள்ளிக்கல்வித் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, நீர்வளத்துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, கூட்டுறவு துறை, பொது நூலகத் துறை ஆகிய துறைகளின் வளர்ச்சி திட்ட பணிகள், முடிவுற்ற திட்ட பணிகள் குறித்து ஆய்வு மேற் கொள் ளப் பட் டது. மேலும், பல்வேறு துறைகள் சார்பாக அரசு நலத்திட்ட உதவிகள் வழங்க பயனாளிகளின் பெயர் பட்டியல் தயார் செய்து, பயனாளிகளை விழா நடைபெறும் இடத்திற்கு வருகை புரிவதற்கு பேருந்து வசதி, குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தருவது குறித்து சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. மேலும், துறை சார்ந்த அலுவலர்கள் தங்கள் துறைகளில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சி திட்ட பணிகளை விரைந்து முடிக்க கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

எனவே, அனைத்து துறை அலுவலர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை எவ்வித தொய்வுமின்றி சிறப்பாக பணிபுரிந்து, அரசு விழா நடைபெற முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்தார்.

தொடர்ந்து, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர், கலெக்டர், சட்டமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில், கிருஷ்ணகிரி அரசு ஆடவர் கலைக்கல்லூரி வளாகத்தில் (சென்னை சாலை) நடைபெறும் அரசு விழாவில் தமிழ்நாடு முதலமைச்சர் கலந்து கொண்டு, புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியையொட்டி, விழா மேடை மற்றும் பந்தல் அமைக்கும் பணிகளை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட வருவாய் அலுவலர் அ.சாதனைக்குறள், ஒசூர் மாநகராட்சி ஆணையாளர் முகம்மது ஷபீர் ஆலம் ஒசூர் சார் கலெக்டர் ஆக்ரிதி சேத்தி மகளிர் திட்ட அலுவலர் பெரியசாமி, மாவட்ட கலெக்டர் நேர்முக உதவியாளர் (பொது) கோபு, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் நடராஜன், மாவட்ட வழங்கல் அலுவலர் கீதாராணி, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் செந்தில் குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், அனைத்து துறை முதன்மை அலுவலர்கள், துணை காவல் கண்காணிப்பாளர், உள்ளாட்சி பிரிதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# தருமபுரி மாவட்டத்தில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமில் அடையாள அட்டை

## கலெக்டர் ரெ.சதீஸ் வழங்கினார்



தருமபுரி,ஆக.31-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 21.04.2025 அன்று உயர் மருத்துவ சேவைகள் வழங்க மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, அரசாணை எண்: 157 கு.ந. (ம) நல்வாழ்வுத்துறை, நாள் : 03.06.2025-ன் படி "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கடந்த 02.08.2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

தருமபுரி மாவட்டத்தில் ஆகஸ்டு மாதம் முதல் டிசம்பர் 2025 வரை வட்டாரத்திற்கு 3 உயர் மருத்துவ சேவை முகாம்கள் வீதம் மொத்தம் 30 முகாம்கள் நடத்தப்பட உள்ளது. இன்றைய தினம் காரிமங்கலம் வட்டம், பெரியாம்பட்டி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் வளாகத்தில் காலை 09.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம் நடைபெறுகிறது. "நலம் காக்கும் ஸ்டாலின்" என்ற முழு உடல் பரிசோதனை மருத்துவ முகாமினை கலெக்டர் பார்வையிட்டார்கள்.

மேலும், இம்மருத்துவ முகாமில் மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவ சேவைகள், ஆலோசனைகள் மற்றும் பரிசோதனைகள் குறித்து கலெக்டர் பார்வையிட்டார்கள். இம்முகாமில் தலைசிறந்த மருத்துவ நிபுணர்களால் பரிசோதனை செய்து சிகிச்சை மற்றும் மருந்துகள் இலவசமாக வழங்கப்படும். மேலும், பல்வேறு மருத்துவ முகாம்களின் மூலம் நோயாளிகளை பரிசோதித்து சிறப்பு மருத்தவ சிகிச்சை தேவைப்படும் நோயாளிகளுக்கு நலம் காக்கும் ஸ்டாலின் பல்நோக்கு மருத்துவ முகாமில் கலந்து கொள்ள செய்து, பயனடைய மருத்துவ குழு மூலம் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அனைத்து பொதுமக்களும் "நலம் காக்கும் ஸ்டாலின்" உயர் மருத்துவ சேவை முகாமில் கலந்து கொண்டு பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இந் நி கழ் வின் போது, உடன் தருமபுரி அரசு மருத்துவ கல்லுhரி முதல்வர் மரு.மனோகரன், இணை இயக்குநர் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் மரு. சாந்தி, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.ராஜேந்திரன் , மாற்றுத்தினாளிகள் நல அலுவலர் சரவணன் முன்னாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் ,பொதுமக்கள் உள்ளனர்.

# நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் புதிதாக தேர்வு செய்யப்பட்டுள்ள துப்புரவு ஆய்வாளர்களுக்கான மாநில அளவிலான அடிப்படை பயிற்சி

## கலெக்டர் இரா.பிருந்தாதேவி தொடங்கி வைத்தார்



சேலம்,ஆக.31-

நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் நேரடி நியமனம் மூலம் பணி நியமனம் செய்யப்பட்டுள்ள பணியாளர்களுக்கான அடிப்படை பயிற்சி வகுப்புகளை வண்டலூர் தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் (30.08.2025) காணொலி காட்சி வாயிலாக தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் மாநிலம் முழுவதும் புதியதாக நியமனம் செய்யப்பட்ட 318 துப்புரவு ஆய்வாளர்களுக்கான பயிற்சியினை சேலம் மாவட்டம், மேட்டூர் காவலர் பயிற்சி பள்ளியில் கலெக்டர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, தொடங்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு அரசு நகர்ப்புற உள்ளாட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலமாக மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி பொறியியல், நகரமைப்பு மற்றும் பொது சுகாதாரப் பிரிவுகளில் இருந்த காலி பணியிடங்கள் நிரப்புவதற்கு அண்ணா பல்கலைக்கழகம் வாயிலாக நடத்தப்பட்ட தேர்வின் மூலம் தேர்வு செய்யப் பட் ட வர் க ளுக்கு 06.08.2025 அன்று பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.

மேற்படி பணியாளர்கள் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரிய ஏதுவாக புத்தாக்க பயிற்சி வழங்க நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களால் உத் த ர வி டப் பட் டதை தொடர்ந்து பதவி வாரியாக சென்னை, திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய ஐந்து இடங்களில் பயிற்சி வகுப்புகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

மேற்படி பயிற்சியில் மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் புதியதாக நியமனம் செய்யப்பட்ட 318 துப்புரவு ஆய்வாளர்களுக்கான பயிற்சி சேலம் மாவட்டம், மேட்டூரில் அமைந்துள்ள காவலர் பயிற்சி பள்ளி வளாகத்தில் வைத்து 30.08.2025 முதல் 20.09.2025 வரை நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் சேலம் மாநகராட்சி ஆணையாளர் மா.இளங்கோவன், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அசோக் குமார், மேட்டூர் வருவாய் கோட்டாட்சியர் சுகுமார், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) குருராஜன், மேட்டூர் நகராட்சி ஆணையாளர் செல்வி நித்யா, மாநகர நல அலுவலர் மரு.முரளி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

# ஏலகிரி அரசு பள்ளி மாணவிகளின் கோரிக்கையை ஏற்று பேவர் பிளாக் கல் பதிக்க நடவடிக்கை எடுத்த எஸ்.பி.வெங்டேஸ்வரன் எம்எல்ஏ.

## மாணவ,மாணவிகள், ஆசிரியர்கள் பாராட்டு



தருமபுரி

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், ஏலகிரி அரசு மேல்நிலைப்பள்ளியில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இலவச மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சியில் தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி. வெங்கடேஷ்வரன் பங்கேற்றார். அப்பொழுது மாணவ, மாணவிகளை பார்த்து தங்கள் பள்ளியில் ஏதாவது வசதி வேண்டுமென்றால் சொல்லுங்கள் என்று கேட்டார். உடனடியாக ஒரு மாணவி எங்கள் பள்ளி வளாகத்தில் மழைக்காலங்களில் மழைநீர் குளம்போல் தேங்கின்றன. மழைநீர் தேங்காத வண்ணம் பள்ளி வளாகத்திற்கு பேவர் பிளாக் கல் பதிக்க வேண்டும் என்றார். மாணவியின் தைரியத்தை சட்டமன்ற உறுப்பினர் பாராட்டினார். பள்ளி வளாகத்திற்கு 10 இலட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் கல் பதிக்க உடனடியாக நிதி ஒதுக்கீடு செய்வதாக அங்கே அறிவித்தார். இப்பணியை நிறைவேற்றி மாணவ, மாணவிகளில் பயன்பாட்டிற்கு அந்த மாணவிகளின் கைகளால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து, ஏலகிரி அரசு மேல்நிலைப்பள்ளி தருமபுரி மாவட்டத்தின் முதன்மையான பள்ளியாகும். சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை துறையின் முதன்மை செயலாளரை நேரில் சந்தித்து இப்பள்ளியை பசுமைப்பள்ளியாக மாற்ற வேண்டும் எ ன்று வலியுறுத்தி நிதி ஒதுக்க கடிதம் வழங்கி, தொடர்ந்து வலியுறுத்திய நிலையில், மேலும் பசுமை நிறைந்த பள்ளியாக மாற்ற தற்பொழுது ரூபாய் 20 இலட்சம் அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பசுமை நிறைந்த பள்ளியாக மேலும் மாற்றுவதற்கான திட்டத்தை தொட ங்கி வைத்தார்.

மேலும், இப்பள்ளியில் அன்பரசி ஆசிரியை தலைமையில் நடைப்பெற்ற பல ஆண்டுகளுக்கு முந்தைய பழைய நாணயங்கள் கண்காட்சியை மாணவ, மாணவிகளின் பார்வைக்கு தொடங்கி வைத்தார். இந்நிகழ்வுகளில், பள்ளியின் தலைமை ஆசிரியர் கிருஷ்ணன், துரைசாமி ஆசிரியர், பசுமை திட்ட ஆசிரியர் சின்னசாமி, பாமக மாவட்ட துணை செயலாளர் த.காமராஜ், ஏலகிரி ஊராட்சி மன்ற துணைத் தலைவர் நாகலிங்கம், பாமக ஒன்றிய செயலாளர் வ.அறிவு மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், ஆசிரியர்கள் பலர் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர்.

# சிலம்பாட்டத்தில் கின்னஸ் சாதனை படைத்த சிறுவன் மாவட்ட ஆட்சியரிடம் வாழ்த்து



நாமக்கல்,ஆக.31-

நாமக்கல் மாவட்ட மனவளக்கலை மன்ற அறங்காவலர் ராஜீவின் பேரன் தேவசிவபாலன் என்ற மாணவன் அலங்கார சிலம்ப பாடத்தில் முழங்கால் சுற்றை ஒரு நிமிடத்தில் 118 முறை எடுத்து உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார். இந்த சாதனையை பாராட்டி, உலக சாதனை புத்தக நிறுவனம் வழங்கிய சான்றிதழை மாவட்ட ஆட்சி தலைவரிடம் காண்பித்து வாழ்த்து பெற்றார். இந்நிகழ்வில் நாமக்கல் மாவட்ட மனவளக் கலை மன்ற அறக்கட்டளை தலைவர், சேலம் மண்டல வளர்ச்சி குழு மற்றும் ஆலோசனை குழு அருள்நிதி முனைவர் மு.ஆ.உதயக்குமார், மாணவனின் தாத்தா ராஜு மற்றும் பயிற்சியாளர்கள் உடனிருந்தனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
17-A/2, Meyyanur Road, Salem - 636 004.
Ph: 0427- 2334165
E-Mail: salemedi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2001/4003
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

தின பூமி
நாளிதழ்
படியுங்கள்

**ENROLLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within Three months thereafter, I, **LENINIYA N. PON, D/o. Ponnarasan,** aged **23** years, permanently residing at **D.No. 3/131, Irukkur, Irukkur (Po), Paramathi Velur (Tk), Namakkal District, Tamil Nadu - 637 204.** Intend having my enrollment as an Advocate moved before the Bar Council of Tamil Nadu & Puducherry, Bar Council Buildings High Court Campus, Chennai-104. Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.

**LENINIYA N. PON**

**ENROLLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within Three months thereafter, I, **PRIYADHARSHINI .B,** D/o. **Balu,** Date of Birth : **17-06-2002**, Permanently residing at **53-1, Gundu Pillaiyar Kovil Street, Ammapet (Po), Salem District, Tamil Nadu - 636 003** intend having my enrollment as an advocate moved before the Bar Council of Tamil Nadu & Puducherry, Bar Council Buildings High Court Campus, Chennai-104. Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.

**PRIYADHARSHINI .B**

**ENROLLMENT NOTICE**

After 10 days of the publication of this notice and within three months there after I, R. Vignesh, S/o Rajamanickam, aged 24 years permanently residing at 1/47, Bajanai Kovil Street, Thirukovilur Taluka, KEELATHALANUR, Post: Keelathalanur, District: Kallakurichi, Tamil Nadu 605766, Intend having my enrollment as an Advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar Council building, high court campus, Chennai - 600 104.
Those who have any valid objections may notify the same to the Bar Council with in Ten days

**R. VIGNESH**

மாண்பமை முதன்மை சார்பு நீதிமன்றம் கிருஷ்ணகிரி , கிருஷ்ணகிரி மாவட்டம்
COS .No.13/2023
கிளை மேலாளர்
ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா
பர்கூர்
-மனுதாரர்/ வாதி
/எதிராக/
Sri Vai Bhoga Traders
Prop.Mr.Balaraja
-எதிர்மனுதாரர்/ பிரதிவாதி
பாலராஜா த.பெ. சண்முகம்
வசிப்பிடம்.
க.எண்: 36,
கண்ணடஹள்ளி (கிராமம்)
பர்கூர் அஞ்சல் மற்றும் வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்-635203.
அறிவிப்பு
வாதி தங்களுக்கு எதிராக கனம் நீதிமன்றத்தில் வங்கி கடன் தொகையை வசூல் செய்ய வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளார்.மேற்படி வழக்கானது வருகின்ற 08.09.2025-ம் தேதியில் தாங்கள் ஆஜருக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. தங்களுக்கு ஆட்சேபனை இருப்பின் கனம் நீதிமன்றத்தில் காலை 10.00 மணிக்கு நேரில் ஆஜராகியோ அல்லது வழக்கறிஞர் மூலம் ஆஜராகியோ ஆட்சேபனை தெரிவித்துக்கொள்ள வேண்டும். தவறினால் தங்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு ஆகிவிடும் என்பதை அறியவும்.
//நீதிமன்றம் உத்தரவு படி//
K. Vijayan B.A.B.L.,
Advocate & Notary,
Uthangarai,
Mob: 9842761110

கனம் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் சமூகம், மேட்டூர்.
D. R. No:750/2025.
M.வேலன், த/பெ. மாரிமுத்து,
2/338, குடித்தெரு,
ஆணைக்கவுண்டம்பட்டி,
சாமிநாயக்கன்பட்டி அஞ்சல்.
ஓமலூர் வட்டம். சேலம் மாவட்டம்.
Pin-636011.
......... மனுதாரர்.
/எதிராக/
உயர்திரு.வட்டாட்சியர் அவர்கள்,
ஓமலூர்.
......... எதிர்மனுதாரர்.
அறிவிப்பு
மேற்படி மனுதாரரின் தாத்தா கந்தசாமி செட்டி த/பெ. குப்புசாமிசெட்டி என்பவர் கடந்த 19.05.1993-ம் தேதியில் சேலம் மாவட்டம். ஓமலூர் வட்டம். அமரகுந்தி கிராமம். K.S.பேட்டை என்ற முகவரியில் வசித்து வந்து இறந்ததை பதிவு செய்ய தவறியதால் பதிவு செய்ய உத்திரவிட கோரி மேற்படி மேட்டூர் வருவாய் கோட்டாச்சியர் அர்களிடம் D.R.No:750/2025-என்ற எண்ணில் மனு செய்துள்ளார். மேற்படி மனுவானது இன்னும் ஒருவார காலத்தில் விசாரணைக்கு வர உள்ளது. மேற்படி மனுபற்றி பொது மக்கள் எவருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் 7-தினங்களுக்குள் ஆட்சேப ணையை தெரிவிக்குமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. தவறும் பட்சத்தில் மனுதாரருக்கு சாதகமாக உத்தரவு வழங்கப்படும் என்பதை அறியவும்.
//கோட்டாட்சியர் உத்தரவுப்படி//
மனுதாரர் வழக்கறிஞர்.
G.PRABU, B.A.,B.L.,
MS. No:1048/2006,
ADVOCATE & NOTARY,
OMALUR, SALEM DT-636455,
CELL:9365810669.

திருவாரூர் முதன்மை மாவட்ட நீதிமன்றம்.
I.A. No. 2/2024
in
O.S.No.6/2009
சுந்தரவள்ளி, த/பெ.சண்முகம்,
எண்.343, 5–வது தெரு,
பிலோமினா நகர்,
தஞ்சாவூர்.
– மனுதாரர்/ 7–ம் பிரதிவாதி
–எதிராக–
1.விஜய்நிவாஸ்,
த/பெ.T.A. நீலகண்டன்,
25/15, முதல் குறுக்குத் தெரு,
மகேந்திரபுரி,
சேலம்– 08,
– 14–ம்எதிர்மனுதாரர்/ 12–ம் பிரதிவாதி
2.அரவிந்த்நிவாஸ்,
த/பெ.T.A. நீலகண்டன்,
25/15, முதல் குறுக்குத் தெரு,
மகேந்திரபுரி,
சேலம்– 08.
– 15–ம் எதிர்மனுதாரர் / 13–ம் பிரதிவாதி
அறிவிப்பு
இந்த மனுதாரர்/ 7–ம் பிரதிவாதி தாவா சொத்தில் தனக்கு முதல்நிலை தீர்ப்பாணையில் ஒதுக்கப்பட்ட 4/9 பாகமான I.A.No.34/2014–ல் உள்ள ஆணையர் அறிக்கையில் "D" ஷெட்யூல் சொத்தாக காட்டப்பட்ட 1450 சதுரமீட்டர் ஸ்தலத்தை தனியே பிரித்து அடைத்துக் கொள்ளும் வகையில் ஒரு இறுதி நிலை தீர்ப்பாணை வழங்க கோரி தாக்கல் செய்த மனுவில் உங்களுக்கு பலதடவைகள் அறிவிப்பு அனுப்பியும் தாங்கள் பெற்றுக்கொள்ளாததால் தமிழ் தினசரி நாளிதழில் பிரசுரம் செய்து அறிவிக்க உத்தரவாகியுள்ளது. இவ்வழக்கு வாய்தா 18.09.2025 அன்று போடப்பட்டுள்ளது. அன்று காலை 10.30 மணியளவில் தாங்கள் நேரிலோ அல்லது வக்கீல் மூலமாகவோ ஆஜராகி தங்கள் கட்சியை தெரிவிக்கலாம். இல்லாவிடில் மனுவில் கோரியபடி தீர்ப்பாகும் என்பதை அறியவும்.
தாவா சொத்து விவரம்:
நாகப்பட்டினம் பதிவு மாவட்டம், மன்னார்குடி சார்பதிவகம், திருவாரூர் வருவாய் மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா எண்.20 கோபிராளனம் கிராமத்தில் புல எண்.44/7–ல் உள்ள புஞ்சை ஸ்தலம் 0.35.0 ஏர்ஸ் முழுவதும்.
S.சக்திவேல், B.Sc., B.L.,
வழக்கறிஞர், திருவாரூர்.

கனம் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் சமூகம், மேட்டூர்.
D.R. No:749/2025.
ராஜேந்திரன், த/பெ. மாரிமுத்து,
6/396/1, பேக்காடு,
தொளசம்பட்டி கிராமம் & அஞ்சல்,
ஓமலூர் வட்டம். சேலம் மாவட்டம்.
......... மனுதாரர்.
/எதிராக/
உயர்திரு.வட்டாட்சியர் அவர்கள்,
ஓமலூர்.
......... எதிர்மனுதாரர்.
அறிவிப்பு
மேற்படி மனுதாரரின் தந்தை மாரிமுத்து த/பெ. கொழந்தக்கவுண்டர் என்பவர் கடந்த 09.05.2012-ம் தேதியில் சேலம் மாவட்டம். ஓமலூர் வட்டம். தொளசம்பட்டி கிராமம், பேக்காடு என்ற முகவரியில் வசித்து வந்து இறந்ததை பதிவு செய்ய தவறியதால் பதிவு செய்ய உத்திரவிட கோரி மேற்படி மேட்டூர் வருவாய் கோட்டாட்சியர் அர்களிடம் D.R.No: 749/2025- என்ற எண்ணில் மனு செய்துள்ளார். மேற்படி மனுவானது இன்னும் ஒரு வார காலத்தில் விசாரணைக்கு வர உள்ளது. மேற்படி மனுபற்றி பொது மக்கள் எவருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் 7-தினங்களுக்குள் ஆட்சேபணையை தெரிவிக்குமாறு தெரிவித்துக் கொள்ளபடுகிறது. தவறும் பட்சத்தில் மனுதாரருக்கு சாதகமாக உத்தரவு வழங்கப்படும் என்பதை அறியவும்.
//கோட்டாட்சியர் உத்தரவுப்படி//
மனுதாரர் வழக்கறிஞர்.
G.PRABU, B.A.,B.L.,
MS. No:1048/2006,
ADVOCATE & NOTARY,
OMALUR, SALEM DT-636455,
CELL:9365810669.

வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி.
மே.எ.அ.தி.மு.எண்:6631/2025,
நாள்:28.08.2025.
மாது, த.பெ. பங்காரு @ மாரியப்பன்,
ஆலேரஹள்ளி கிராமம்,
களர்பதி அஞ்சல், போச்சம்பள்ளி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.
மனுதாரர்.
//எதிராக//
திரு.வருவாய் வட்டாட்சியர்,
போச்சம்பள்ளி,
எதிர்மனுதாரர்.
அறிவிப்பு
மனுதாரராகிய நான் எனது தாயார் லட்சுமி க.பெ. பங்காரு@மாரியப்பன் என்பவர் கடந்த 08.05.2005-ம் தேதியில் ஆலேரஹள்ளி கிராமத்தில் இறந்துவிட்டார். மேற்படி எனது தாயாரின் இறப்பினை எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய தவறிவிட்டேன். எனது தாயாரின் இறப்பினை பதிவு செய்ய கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மேற்படி மனுவினை தாக்கல் செய்துள்ளேன். இறப்பு பதிவு குறித்து யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த செய்தித்தாள் விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15-நாட்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தெறிவித்துக்கொள்ள வேண்டியது, தவறும் பட்சத்தில் மேற்படி மனுவில் மனுதாரருக்கு ஆதரவாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.
//வருவாய் கோட்டாட்சியர் உத்திரவுப்படி//
மனுதாரர்
மாது, த.பெ. பங்காரு@மாரியப்பன்,
ஆலேரஹள்ளி கிராமம்,
களர்பதி அஞ்சல்,

வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி.
மே.எ.அ.தி.மு.எண்:6630/2025,
நாள்:28.08.2025.
மாது, த.பெ. பங்காரு @ மாரியப்பன்,
ஆலேரஹள்ளி கிராமம்,
களர்பதி அஞ்சல்,
போச்சம்பள்ளி வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.
மனுதாரர்.
//எதிராக//
திரு.வருவாய் வட்டாட்சியர்,
போச்சம்பள்ளி,
எதிர்மனுதாரர்.
அறிவிப்பு
மனுதாரராகிய நான் எனது தகப்பனார் பங்காரு@மாரியப்பன் த.பெ.புவன் என்பவர் கடந்த 28.04.2009-ம் தேதியில் ஆலேரஹள்ளி கிராமத்தில் இறந்துவிட்டார். மேற்படி எனது தகப்பனாரின் இறப்பினை எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய தவறிவிட்டேன். எனது தகப்பனாரின் இறப்பினை பதிவு செய்ய கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மேற்படி மனுவினை தாக்கல் செய்துள்ளேன். இறப்பு பதிவு குறித்து யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த செய்தித்தாள் விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15-நாட்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தெறிவித்துக்கொள்ள வேண்டியது, தவறும் பட்சத்தில் மேற்படி மனுவில் மனுதாரருக்கு ஆதரவாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.
//வருவாய் கோட்டாட்சியர் உத்திரவுப்படி//
மனுதாரர்
மாது, த.பெ. பங்காரு@மாரியப்பன்,
ஆலேரஹள்ளி கிராமம்,
களர்பதி அஞ்சல்,

